# யுத்தமுனைகளுக்கு முப்படைத் தளபதிகள் விரைவு

(கொழும்பு)

முப்படைத் தளபதிகளும், உயர் படை அதிகாரிகளும் வடக்கு-கிழக்கில் யுத்தமுனைப் பகுதிகளுக்கு தீவிர சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினர் மத்தியில் அவ [4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 29 இதழ் 181
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13 — 08 — 1992

## படை நடவடிக்கைக்கு சிப்பாய்கள் தயாராம்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் எந்தப் பகுதியிலும் இராணுவ நடவடிக்கைகளை தொடர, தாங்கள் தயாராக இருப்பதாகச் (4-ம் பக்கம் பார்க்க)

## பத்மநாபா கொலை வழக்கு: குற்றப்பத்திரம் தாக்கல்

(சென்னை)

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா உட்பட 16 பேர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமான குற்றப்பத்திரங்கள் சென்னை நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் தி. மு. க. அமைச்சர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலர் திரு. நாகராஜன் மற்றும் 24 பேர் மீதும் மேற்படி குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

★ தளபதிகளின் இறுதிச் சடங்கிறுல்

# கொழும்பில் மீண்டும் கலகம்

# மக்கள் கும்பல் கடும் ஆவேசம்

## - பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் -

(கொழும்பு)

பிரிகேடியர் விஜய விமலரத்ன, றிய அட்மிரல் மோகான் ஜெயமகாவின் இறுதிக்கிரியைகளின் போது ஆவேசமடைந்த மக்கள் கூட்டம் பெரும் வன்முறைகளில் ஈடுபட்டது. இதை தடுக்க பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தையும், குண்டாந்தடியடி பிரயோகத்தையும் மேற்கொண்டனர். இதனுல் பெரும் கலவரமே மூண்டது.

நேற்றைய தினத்தை துக்க தினமாக பிரகடனப்படுத்துமாறு மக்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்தே மக்கள் கூட்டம் ஆவேசமடைந்து வன்முறையில் இறங்கியது.

அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் மக் (4-ம் பக்கம் பார்க்க)

## பல வாகனங்கள் தீக்கிரை!

(கொழும்பு)

இந்த இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மக்கள் கும்பல் பொலிஸ் வாகனங்கள் உட்பட பல வாகனங்களை தீக்கிரையாக்கியது. பொலிஸாரின் தடியடியினுல் பொது மக்கள் பலர் படுகாயமடைந்தனர்.

கனத்தை மயானத்தினுள் பூதவுடல்களை தாங்கிய பீரங்கி வண்டிகள் நுழைந்தபோது வன்முறைகள் அதிகரித்தன. தீக்கிரையாக்கப்பட்ட வாகன (4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் அதிகாரிகள் மயிரிழையில் தப்பினர்

(கொழும்பு)

பிரிகேடியர் விஜய விமலரட்ணவின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மீதும் பலதத கல்லெறி நடத்தப்பட்டதாகவும், இவர்கள் மயிரிழையில் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அமைச்சர்கள், பிரத்தியேகமான, பாதுகாப்பான இடத்தில் இருந்த போதும் இவர்கள் இருந்த பகுதியிலும் பலத்த கல்லெறி (4ம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது மக்கள் தாக்குதல்

(கொழும்பு)

புலிகளின் கண்ணி வெடியில் கொல்லப்பட்ட இராணுவ தளபதிகளில் இருவரின் இறுதிச்சடங்குகள் பொறளை கனத்தை மயானத்தில் நடைபெற்றபோது ஆத்திரமுற்ற மக்கள் பலர் படையினர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையாம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா கூறினர்.

இதேவேளை வடபகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய படை நடவடிக்கை குறித்தும், அதற்கான வழிகாட்டல்கள் குறித்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட படையதிகாரிகள் மட்டத்தில் விளக்க மாநாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினர்.

இதற்கிடையில் யாழ்.குடா மீதானஇராணுவநடவடிக்கையில் சில பின்னடைவுகள் ஏற்படலாமெனவும் சில அதிகாரிகள் குறிப்பிட்டனர். [கே-சி]

## தமிழக கரையோரங்களில் மீண்டும் புலிகள் நடமாட்டம்?

(சென்னை)

தமிழக கரையோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் மீண்டும் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதனையடுத்து தமிழக அரசிற்கு சிறப்பு உதவிகள் வழங்கப்படவேண்டும். என அ. அ. தி. மு. க. உறுப்பினர் எஸ். முத்துமணி மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

ராஜ்ய சபையில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு மத்திய அரசிடம் அவர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

[4ம் பக்கம் பார்க்க]

## மலையகத்தில் குழப்பம் விளைவிக்க முயற்சி

(கொழும்பு)

மலையகத்தில குழப்பத்தை விளைவிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுளது.

மலையகத்தில் குழப்பத்தை விளைவிப்பதற்காக கந்தலம ஹோட்டல் விவகாரத்துடன் திரு. தொண்டமானையும் சம்பந்தப்படுத்த சில தீயசக்திகள் [4-ம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர்கள் 20 பேரும் விடுதலை

(கொழும்பு)

கச்சதீவுப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களும் நேற்றுமுன் தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்திய தூதரகம் இலங்கை அரசுடன் மேற்கொண்ட நடவடிக்கையை தொடர்ந்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினமே இராமேஸ்வரம் சென்றடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (கே-சி)

★ தியத்தலாவை பயிற்சி முகாமிலிருந்து

## தப்பியோடிய சிப்பாய்கள் துரத்திப் பிடிக்கப்பட்டனர்

(கொழும்பு)

தியத்தலாவை இராணுவ பயிற்சி முகாமிலிருந்து தப்பியோடிய பல சிப்பாய்கள் ஏனைய படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதிகாலை பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே (4ம் பக்கம் பார்க்க)

**காடு வளர்க்க கைகொடுத்தால்**
**இந்நாட்டு சூடு தணிக்கும் செயல்**

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### வாங்கலாம் / விற்கலாம்

தரமான பாவித்த கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள், உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம். மணிக்கூடுகளுக்கான சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6657)

### விற்பனைக்கு

வீடியோ கமராவுக்குரிய ஸ்ராண்டுகள் இரண்டு, லென்சுகள் நான்கு, Rechargable Batteries இரண்டு, நஷனல் கஸற் றேடியோக்கள் Rs. 3000/- இற்குட்பட்டவை. Casio Data Bank R. G. Rs. 6750/-, சீக்கோ ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் இருபாலாருக்குமுரியது. பெறுமதி Rs. 3000/- ஏறத்தாழ Rs. 1750/-க்கு பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி 6656)

### விற்பனைக்கு

சோடி பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ''கோமதி''. பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி. (சி 6663)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு - 5)

யாழ். மாவட்டத்தில்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடாத்தப்படும் புலமைப் பரிசில் அடுத்த பரீட்சை 15-08-92 சனி மு. ப. 8-00, மு. ப. 10-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6670)

### சோதிடம்

Anpugee ''Shy anbugee'' ஆக 30-06-1992 லிருந்து தனியாக கந்தசாமி அன்பழகனால் இயங்குகிறது. (இம் மண்ணில் பிறந்து நண்பனாக இருக்க விரும்புகிறவர்களிற்கு மட்டும்) 50, வைரவர் கோவில் வீதி) 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6671)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(பருத்தித்துறை)

தென். புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 37-வது ஆண்டு நிறைவு விழா, விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா ஆகியன முருகையா கோவிலடி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் திரு. எஸ். தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. (52)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 09 | 07 | 1931



உதிர்வு: 13 | 07 | 1992

### திருமதி வேதாரணியம் இராஜேஸ்வரி

எங்கள் உதயதாரகையே, மங்காமதியே ஒளிமயமாய் இருந்த எம்மில்லம் உன் பிரிவால் மீளா இருள் சூழ்ந்ததம்மா. எங்கள் கண்கண்ட தெய்வம் நீயே அம்மா, எங்கள் தனலட்சுமியே எம்மில்லம் வெறிச்சோடிக் கிடக்குதம்மா. உன்னைப்போல் ஒரு அன்னையைக் காண்பது அரிதிலுமரிதம்மா.

**குறிப்பு:**

உயர்திரு. மு. வேதாரணியம் ஆசிரியர் அவர்களின் வாழ்க்கைத்துணைவியும், சங்கீதவித்துவான் A. K. கருணாகரனின் மூத்த சகோதரியுமாகிய திருமதி இராஜேஸ்வரி அம்மையாரின் அந்தியேட்டிக்கிரியை 13-8-92 (இன்று) வியாழக்கிழமை காலை 7-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

உன் நினைவால் வாடும்:
கணவன், பிள்ளைகள், குடும்பத்தவர்.

''ரதிமகால்'',
கலட்டி வீதி,
கரவெட்டி.

(சி-6659)

## 10 அகதிமுகாம்களில் மாணவருக்கு சீருடை

(உடுப்பிட்டி)

போரூட் நிறுவனத்தினர் வடமராட்சி கிழக்கில் பத்து அகதி முகாம்களிலுள்ள 400 மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்கி வருகின்றனர், மற்றும் அல்வாய் அம்பாள் பாடசாலையில் கல்வி பயிலும் 50 வறிய மாணவர்களுக்கும் இலவச சீருடைகளை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் குடிநீர் வசதியற்ற மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களின் குடிநீர் வசதி கருதி இரு குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்துள்ளது.

அல்வாய் அம்பாள் பாடசாலைக்கும் ஒரு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போரூட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (150)

## சங்கீத சபை பரீட்சை பெறுபேறுகள்

(நல்லூர்)

வட இலங்கை சங்கீத சபையால் இவ்வருடத்திற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் இம்மாதம் 20ம் திகதியளவில் வெளியிடப்பட விருக்கின்றது. மேற்படி பரீட்சைக்காக ஏறத்தாள 10 000 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்களுக்கான செய்முறைத்தேர்வு கடந்த ஏப்ரல் 16ம் திகதி ஆரம்பமாகி இலங்கை முழுவதிலுமுள்ள 89 பரீட்சை நிலையங்களிலும், அறிமுறைத் தேர்வு மே மாதம் 16ம் 17ம் திகதிகளில் 29 பரீட்சை நிலையங்களிலும் நடைபெற்றது. (158-அ)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(புலோலி)

புத்தூர் எவெறெஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

பதினொரு பேர் கொண்ட இவ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பத்துக்கு மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன. (61-அ)

## மண்ணெண்ணை விநியோகம்

[புலோலி]

வடமராட்சிப் பகுதியிலுள்ள தமிழகம் விற்பனை நிலையங்கள் இப்பகுதி மாணவர்கள் கல்வி பயில வசதியாக மண்ணெண்ணை வழங்கிவருகிறது.

இப்பகுதியிலுள்ள பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி விற்பனை நிலையங்களில் வைத்து மண்ணெண்ணை வழங்கப்படுகிறது. (61 அ)

## மாதாந்த உதவிப் பணம்

[சித்தன்கேணி]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகின்றது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம உத்தியோகத்தர்களினூலும் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது. [137-அ]

## மடு அகதிமுகாமில் குடிநீர்த் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் மடு அகதிமுகாமில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதுபற்றி அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அதிகாரிகளிடம் அகதிகள் முறையிட்டுள்ளனர். மழையின்மை வரட்சி காரணமாக தொற்றுநோய்களும் அங்கு பரவியுள்ளதாக தெரியவருகிறது. (59-அ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அரியாலை ச. ச. மு. நிலைய மைதானத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம் வருமாறு:

13 வயதுப் போட்டியில் சென். ஹெக்ஸ் கழகத்தை எதிர்த்து சென்.மேரிஸ கழகம் மோதும் 40 வயதுப் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து சென். அன்ரனிஸ் கழகம் மோதும். (வி)

## மண்ணெண்ணை விநியோகம்

(கொக்குவில்)

கொக்குவில் சந்திக்கு அருகாமையில் 1 லீற்றர் மண்ணெண்ணை 30 ருபாவாக ஒரு குடும்பத்திற்கு ஐந்து லீற்றர் வீதம் இருபது பரல் மண்ணெண்ணை பகிர்ந்து வழங்கப்பட்டது. (1.5)

## விசேட பரீட்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக் கல்வி பயிலுனர் ஆசிரியர்களாக தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையில் இடம் பெயர்ந்தபரீட்சார்த்திகளுக்கு விசேட பரீட்சை நிலையமாக நல்லூர் சி. சி. த. க பாடசாலை அமைக்கப்பட்டிருந்தது.

ஆகையால் இப் பரீட்சை நிலையத்தில் ஜுலை 11ம் திகதி தோற்றிய பரீட்சார்த்திகள் இதற்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 26ம்திகதிக்கு முன் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். [சு]

## வருடாந்த பொதுக்கூட்டம்

[நெல்லியடி]

யாழ் மாவட்ட சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு திரு. எஸ். முருகநேசன் தலைமையில்யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் நடைபெறும், (160)

## ஆங்கில வகுப்பு

[வட்டுக்கோட்டை]

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள நான்கு பாடசாலைகளில் வார இறுதி ஆங்கில வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

யாழ். அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ். சுளிபுரம் விக்ரோறியாக கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளிலுமே இந்த வார இறுதி ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்கள் இருபாலாரும் இந்த வகுப்பில் சேர்ந்து படிக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (139-அ)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி

பாட்டு: கே. ராமநாதன். வயலின்: எஸ். சர்வேஸ்வர சர்மா, மிருதங்கம்; எஸ். மகேந்திரன்.

## அகதிகளை கப்பல் மூலம் அனுப்ப எற்பாடு

(சென்னை)

மூன்றுமாத இடைவெளிக்குப்பின் கப்பல்மூலம் இலங்கை அகதிகளை அனுப்பும்வேலை வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

ஐநூறு இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு ராமேஸ்வரத்திலிருந்து கப்பல் இலங்கைக்கு புறப்பட இருப்பதாக ராமநாதபுர ஆட்சித் தலைவர் தெரிவித்தார். (கே)

## கடற்படை ரோந்து தீவிரம்

(யாழ்ப்பாணம்)

பாக்குநீரிணைக் கடலில் கடற்படை ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக பாக்குநீரிணைக்கு ஊடாக கடற்படைக் கப்பல்கள் தீவிர ரோந்து செய்துவருகின்றன. இதன்காரணமாக மீனவர்கள் மீன்பிடித்தொழிலை செய்ய முடியாது பெரும் கஷ்டமடைந்து வருகிறார்கள். (51)

## முதலாமிடம்

(உடுவில்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரும் பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட அலுவலகத்தினரும் இணைந்து நடாத்திய சிக்கன முறையில் சிறந்த போஷாக்கு பற்றிய கண்காட்சியின்போது நடைபெற்ற வினாவிடைப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி ம. விநோதா முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலைச்சம்பல் தயாரித்தல், இலைச்சுண்டல் தயாரித்தல் போட்டிகளில் அதே பாடசாலை மாணவி செல்வி வி. சுந்தரவல்லி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார் (109-அ)

## அமைதிவேண்டி பிரார்த்தனை

(உடுப்பிட்டி)

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் திருவிழா உற்சவத்தின் போது நாட்டில் அமைதி வேண்டி மௌனப் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. (150-அ)

## குளம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

புலோலியிலுள்ள கொட்டுக்கேணிக்குளம் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அவ்வூர் மக்களால் சிரமதான முறையில் திருத்திப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. [62]

## மூக்குக் கண்ணாடி விநியோகம்

(உடுப்பிட்டி)

அல்வாய் தெற்கு பாரதிதாசன் சனசமூக நிலையம் கொழும்பு லயன்ஸ் கழகத்திடமிருந்து பெற்ற 75 மூக்குக் கண்ணாடிகளை பார்வைகுறைந்தோருக்கு இலவசமாக வழங்கியது. [15?-அ]

## ★ அராலிச் சந்தி கண்ணிவெடி:

# வடபிராந்திய 'விங் கமாண்டர்' அதிர்ஷ்டவசமாக தப்பினர்

(கொழும்பு)

தீவகப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் விமானப்படை வடபிராந்திய விங் கொமாண்டர் சுனில் கப்ருல் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கண்ணிவெடிச் சம்பவத்தில் இறந்த இராணுவ அதிகாரிகள் அனைவருடனும் சேர்ந்து விங் கொமாண்டர் சுனில் கப்ருலும் கொழும்பிலிருந்து ஒரே விமானத்தில் பலாலிக்கு வந்தாரென்றும், இவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை பலாலி இராணுவ முகாமில் மதிய உணவை அருந்திய பின்பு காரைநகருக்கு புறப்பட ஆயத்தமாகிய போது விங் கொமாண்டர் சுனில் கப்ருலை உடனடியாக அநுராதபுரம் விமானப்படைத் தளத்துக்கு திரும்பும்படி கொழும்பு தலைமைச்செயலகத்திலிருந்து அவசரஅழைப்பு கிடைத்ததினால் அவர் உடனடியாக ஹெலிகொப்டர் ஒன்றில் அநுராதபுரத்துக்குச் சென்றதையடுத்து இவ்விபத்தில் சிக்காது தப்பித்துக் கொண்டார். (வி)

# ஈரல், மூளை பாதிக்கப்பட்டே கொப்பேகடுவ இறந்தார்

(கொழும்பு)

அராலித்துறையில் அமுக்க கண்ணிவெடிமீது 'லான்ட் ரோவர்' வாகனம் சென்றபோது அதன் முன் ஆசனத்தில் வடபிராந்திய கொமாண்டர்கள் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன, மோகான் ஜெயமகா ஆகிய மூவரும் இருந்தனர். பிரிகேடியர் விமலரத்ன வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தார். அவருக்கருகே கொமடோர் ஜெயமஹாவும், இடது கரையில் டென்ஸில் கொப்பேகடுவவும் இருந்தனர்.

இச்சம்பவத்தில் இறந்த ஏனைய ஏழுபேரும் வாகனத்தின் பின் பகுதியில் இருந்த இருநீள ஆசனங்களில் இருந்தார்கள்.

இந்த வாகனம் மேற்படி அமுக்க கண்ணிவெடி மீது சென்றபோதே சம்பவம் இடம்பெற்றுள்ளது. கண்ணிவெடி வெடித்த இதே பாதையால் பல தடவைகள் பெருமளவு வாகனங்கள் சென்று வந்தபோதிலும் இந்த வாகனம் [லான்டரோவர்] சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வாகனம் புலிகளினால் திட்டமிட்டு தாக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

டென்ஸில் கொப்பேகடுவ படுகாயமடைந்ததால் இரத்மலானை விமானத்தளத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று அங்கே டாக்டர்கள் அவரது மார்பில் சத்திர சிகிச்சை செய்து இருதயத்துக்கு மசாஜ் செய்தார்கள். ஆனால் அவரது ஈரல், மூளை, வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்ததால் ஆஸ்பத்திரியில் சிலநிமிட நேரத்தில் மரணமடைந்தார்

இதேவேளை ஏனைய படை அதிகாரிகள் கண்ணிவெடி வெடித்த இடத்திலேயே இறந்து விட்டனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## வெளிநாட்டுப் பயணிகளின் செலவாணிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான செலவாணிக் கட்டுப்பாடு மேலும் தளர்த்தப்பட்டுள்ளது.

இந்தப் பங்கீடு மேலும் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி வயதுவந்தோர் 7500 அமெரிக்க டொலர்களையும், சிறுவர்கள் 3750 அமெரிக்க டொலர்களையும் எடுத்துச்செல்ல முடியும்

இதேவேளை இந்தியாவுக்குப் பயணம் செய்வோர் ஆண்டு ஒன்றுக்கு ஒருமுறை 800 அமெரிக்க டொலரையும், சிறுவர்கள் 400 டொலர்களையும் கொண்டுசெல்ல முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## சிறப்பு சொற்பொழிவு

(உடுவில்)

உடுவில் கிழக்கு கற்பகவிநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் சிறப்புச்சொற்பொழிவுகள் நாளை 14ம் திகதி வரை நடைபெறும்.

திருவாசகம், திருமந்திரம் சம்பந்தமான பேருரைகளை பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் நிகழ்த்தி வருகின்றார். (109)

# கொழும்பில் தொடர்ந்தும் தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுபுறங்களிலும் ஏனைய சில நகரங்களிலும் தொடர்ந்தும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொப்பேகடுவவினதும் ஏனைய ஆறு தளபதிகளினதும் மரணச் சடங்கு கடந்த திங்கள் நடைபெற்றபோது மொதற்கில் பலபகுதிகளிலும் பெரும் பதற்றம் நிலவியதையடுத்தே இந்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிலும் ஏனைய நகர்களிலும் தமிழ் மக்களின் நடமாட்டம் பெருமளவு குறைந்து காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (சி)

## இராசி பலன்

**13-08-1992**
**வியாழக்கிழமை**
**(தமிழுக்கு ஆடி 29)**

பூரணை பி.ப. 3-51 வரை, திருவோணம் மு.ப. 8-56 வரை சித்தயோகம், பூரணை விரதம், இராகு காலம் பகல் 1-65 முதல 3-05 வரை, சுப நேரம் காலை 7-35 முதல் 9-05 வரை,

மேடம்: அதிகாரிகள் பாராட்டு, பணவரவு, தொழில் சிறப்பு

இடபம்: கடன்சுமை, குடும்ப கவலை, வீண் வம்பு

மிதுனம்: மனப்போராட்டம், காரியதோல்வி, அசதி.

கடகம்: வாக்குவன்மை, தொழில் லாபம், பயணம்.

சிங்கம்: சுபகாரியம், தியாக சிந்தை, நன்மதிப்பு.

கன்னி: வேலைப்பழு, விதண்டாவாதம், தயக்கம்.

துலாம்: ஏமாற்றம், காரிய தடை, அலைச்சல்.

விருச்சிகம்; பணியாள் உதவி, பெண்பகை, தெய்வ தரிசனம்.

தனுசு: குடும்ப சஞ்சலம், அமைதியற்றபோக்கு, செலவு.

மகரம்: காரியபலிதம், மன நிறைவு, புதிய உறவு.

கும்பம்: கண்ணில் ரோகம், இனசனபகை; மறதி.

மீனம்: சுபச்செய்தி, பிதா நன்மை, குடும்ப மகிழ்ச்சி.

— ஜோஸ்யர்

## இன்று

[யாழ்ப்பாணம்]

தாவடி அருள்மிகு (அம்பலவாணசுவாமி) முருகன் கோவிலில் நடைபெறும் திருவிழாக் கால நிகழ்ச்சியில் காரைநகர் கம்பன கழக அமைப்பாளர் த சிவகுமாரனின் பத்துத்தினங்கள் பெரிய புராண தொடர் சொற்பொழிவு இன்று வியாழக்கிழமை பூர்த்தியடைகிறது.

ஃ ஃ

(உடுவில்)

இருக்கு, யசுர்வேத பிராமணர்களின் வருடாந்த உபாகர்மம் (பூநூல் மாற்றுதல்) நிகழ்ச்சி இன்று 13ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. பிரம்மோபதேசம் பெற்று பூநூல் தரித்துள்ள பிராமணர்கள் கோவில்களில் ஒன்றுகூடி உபாகர்ம நிகழ்வை நடத்துவர்.

ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் யாழ்.பிராந்திய சபையின் கூட்டம் கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் இன்று 13ம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3-30மணிக்கு தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். [154-அ]

## எம்மை அழிப்போரை இல்லையென்றுக்கு

தொல்லை நின்றுட! துயரம் வென்றுட
நல்லையில் மன்றுடும், நமது துயரோட
எல்லைமீறி வந்து எம்மை அழிப்போரை
இல்லை என்றுக்கு இளைய குமரோனே!

— குமரன்

(இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோவில் 11ம் திருவிழா)

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களில் தரக்கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சமூகத்திற்கு ஏற்படக்கூடியதான தாக்கங்களை பொருட்படுத்தாமல் பலர் செயற்பட்டு வருகின்றனர் தரம் குறைந்த உணவு பாவனைக்கு ஏற்றவையல்லாத இனிப்பூட்டிகள், சுவையூட்டிகள், நிறங்கள்போன்றவற்றை போலி வர்த்தக சுட்டுத்துண்டுகளை (லேபல்களை) பயன்படுத்தி விற்பனை செய்வதுடன், உடலுக்குத் தீங்கு பயக்கக்கூடிய செயற்கை இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதில் இருந்து உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: இன்றைய நிலையில் காலத்தை வாய்ப்பாகக் கொண்டு தமது இலாபத்தினை மட்டுமே குறி வைத்துச் செயற்பட்டுவரும் சமூக நோக்கற்ற சுயநலங்கொண்ட இவ்வுற்பத்தியாளர்களால் நுகர்வோர் பெரும் பாதிப்புக்களை அடைந்து வருகின்றனர் சுமை தாங்கிகள் போல் துன்பங்களைச் சுமந்து வாழும் மக்களை மேலும் துன்பமடையச் செய்யும் இவ்வாறான சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர்களை இனம் காண்பதுடன் அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதும் இன்றைய நிலையில் அவசியமாகும்.

இதன் மூலம் நுகர்வோரிடம் தரமான உற்பத்திகள் சென்றடைவதை உறுதி செய்து கொள்வதுடன், நுகர்வோருக்கு ஏற்படக்கூடியதான பாதிப்புகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். இதன் பொருட்டு உற்பத்திப்பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தரநிர்ணயம் மேற்கொள்ளப்படல் வேண்டும். கடந்த காலங்களில் இப்பகுப்பாய்வு நடவடிக்கைகள் யாவும் கொழும்பிலுள்ள ஆய்வு கூடங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன இன்று இவ்வசதிகள் தடைப்பட்ட நிலையில், உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகமானது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட, விஞ்ஞானபீட ஆய்வு கூடங்களில் உணவுப் பொருட்களையும் மற்றும் உள்ளீடுகளையும் பகுப்பாய்வு செய்து, முறைகேடான உற்பத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கைகளை திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதற்கென தொழிற்துறை அபிவிருத்தி நிறுவனம் என்ற அமைப்பொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்துறை அபிவிருத்தி நிறுவனமானது, தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில், உற்பத்தியாளரை வழி நடத்தல், நுகர்வோர் தரமான உற்பத்திகளைப் பெறுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களைக் கொண்டு செயற்படும். உற்பத்திகள் மீதான தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தொழிற்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தரநிர்ணயக் குழு மேற்கொள்ளும். இக்குழுவில யாழ். பல்கலைக்கழகம மற்றும் சுகாதாரப்பகுதியினர், பிறதுறை சார்ந்த நிபுணர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். (அ)

## பொலிஸ் வாகனங்கள் சேதம் பற்றி விசாரணை

[கொழும்பு]

கனத்தையில் லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையின் போது, இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்புடைய பலரின் வாக்குமூலங்களைப் பொலிசார் பதிவு செய்து வருகிறார்கள்.

அன்றைய தினம் பொலிஸ் வாகனங்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தியதோடு பல நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தக் குழப்பங்களை எதிர்க்கட்சியைச் சேர்ந்த கும்பலே நடாத்தியதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (கே)

# ஷெல் தாக்குதலில் இளைஞர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவத்தினர் தெல்லிப்பழைப் பகுதியை நோக்கி கடந்த ஞாயிறு பி.ப. 4 மணியளவில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த சுபாஸ்கரன் (16-வயது) என்பவரே காயப்பட்டவராவார்.

மேற்படி ஷெல் தாக்குதல் தெல்லிப்பழை, குப்பிளான்பகுதிக்குடியிருப்புக்களை நோக்கிப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-56)

## மீனவர்கள் பாதிப்பு

(உடுப்பிட்டி)

உடப்பு பகுதி மீனவர்கள் முந்தல் கடலில் மீன் பிடிக்கப் பொலிசார் தடை விதித்ததால் 2500 மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (150-அ)

# யாழ். மீதான தாக்குதல் பற்றி ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது

## — பிரேமா பூரண ஆசி வழங்கியிருந்தார் —

(கொழும்பு)

யாழ். குடாநாடு மீது இராணுவம் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளவிருந்த பாரிய இராணுவத் தாக்குதல் குறித்து, ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இராணுவ உயரதிகாரிகள் கலந்துரையாடினர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாடு மீது இராணுவம் மேற்கொள்ளவிருந்த பாரிய இராணுவத் திட்டத்தை, காலஞ்சென்ற மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும், பிரிகேடியர் விமலரத்னவும், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறியதுடன், அடுத்ததாகத் தாக்குதல் நடத்தப்படவேண்டிய பகுதிகள் பற்றிய வீடியோப் படம் ஒன்றையும ஜனாதிபதிக்கு இவர்கள் காண்பித்துள்ளனர். இச்சந்திப்பில் பல படை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் அனுமதியையும், ஆசியையும் பெற்ற பின்னர், கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகலே இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழுவினர் பலாலி இராணுவ முகாமுக்கு விசேட விமானம் மூலம் சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# பெனஸிர் பூட்டோவுக்கு மரண தண்டனை வழங்குக

## - சமய அமைச்சர் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசிர் பூட்டோவுக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டுமென, மத்திய சமயத்துறை அமைச்சர் அப்துல் சப்பார் மியாமி பாகிஸ்தான் அரசைக் கேட்டுள்ளார்.

இஸ்லாமுக்கு எதிராக பெனசிர் பூட்டோ கருத்து வெளியிட்டிருப்பதால் இஸ்லாமிய சட்டப்படி அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்றும், ஆனால் அல்லாவிடமும், நாட்டு மக்களிடமும் அவர் மன்னிப்புக் கேட்கும் பட்சத்தில் இக்குற்றம் மன்னிக்கப்படலாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

# தளபதிகளின் இறுதிகிரியை நேற்று நடைபெற்றது

(கொழும்பு)

கண்ணிவெடியில் கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன, றியர் அட்மிரல் மோஹன் ஜயமஹா, கேர்ணல் ஸ்ரீபன் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் பூரண இராணுவ மரியாதையுடன் நேற்று நடைபெற்றது.

மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன, றியர் அட்மிரல் மோஹன் ஜயமஹா ஆகியோரின் இறுதிச்சடங்குகள் நேற்று பொரளை மயானத்தில் இடம் பெற்றது. பெருந்திரளான மக்கள் இந்த இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர்.

கேர்ணல் ஸ்ரீபனின் இறுதிச் சடங்கு நேற்று கண்டியில் நடைபெற்றது. (மா)

★ பரீட்சை——

# மேற்பார்வையாளர்கட்கு கூடிய கட்டணம்

[கொழும்பு]

பரீட்சைத் திணைக்களம் இந்த வருடத்தில் இருந்து பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு கூடுதலாக கட்டணம் கொடுக்க முன்வந்திருக்கிறது.

இதன் பிரகாரம் பரீட்சை இணைப்பாளர்களுக்கு 225-00 ரூபாவும், பரீட்சை மேற்பார்வையாளருக்கு 175 ரூபாவும் நிரந்தர பரீட்சை நோக்குநருக்கு 125 ரூபாவும் ஒரு நாளைக்கு வழங்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (சு)

# வடபகுதி வந்த 58 லொறிகள் தாண்டிக்குளத்தில் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் 58 லொறிகளை இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு உணவுப் பொருட்களுடன் வந்த இந்த லொறிகளை இராணுவத்தினர் தடைமுகாமில் வைத்து பரிசோதனை செய்த பின்பு தடுத்து வைத்துள்ளனராம்.

இதேநேரம் உணவுப் பொருட்களுடன் வரும் மற்றைய லொறிகளை இராணுவத்தினர் வடபகுதிக்குள் செல்வதற்கு அனுமதி வழங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட இந்த 58 லொறிகளை மட்டும் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளதின் மர்மம் தெரியவில்லை.

## விடைத்தாள்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தர பரீட்சை விடைத்தாள்கள் நேற்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (சு)

## இன்று

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் கலைஞானியின் அரும்பொருட் தொல்பொருள் காட்சி திறப்புவிழா இன்று காலை 8 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கண்காட்சி இம்மாதம் 28ந் திகதி வரை இடம் பெறவிருக்கிறது. [மா-சி]

## 500 அகதிகள் இலங்கை வருவர்

[சென்னை]

இலங்கை தமிழ் அகதிகள் 500 பேர் எதிர்வரும் திங்கட்கிழமை கப்பல் மூலம் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

3 மாத கால இடைவெளியின் பின்னர் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். [க]

★ நோயாளிகளுடன்

# குமணக் கப்பல் நாளை புறப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் தற்போது தரித்து நிற்கும் குமணக்கப்பல் நாளை 14-ம் திகதி நோயாளிகளுடன் திருமலைக்குச் செல்ல விருக்கின்றது.

இக்கப்பலில் நோயாளிகளும் அவர்களின் உதவியாளர்களுமாக மொத்தம் 79 பேர் செல்கின்றார்கள்.

இக்கப்பல் மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து 2-வது கட்டமாக நோயாளிகளையும், தபால் பொதிகளையும் ஏற்றிக் கொண்டு 16-ம் திகதி கொழும்புக்குச் செல்லும்.

வெளிநாடுகளுக்கு தபால்களை அனுப்புவோர் 15-ம் திகதிக்கு முன் தபால்களை யாழ் தபால் நிலையத்தில் சேர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். [வி - 56]

### படையினர் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு எதிராக மக்கள் கூட்டம் கூச்சல், குழப்பம் செய்தபோது அவர்களைப் படையினர் தாக்கியதையடுத்தே மக்கள் கூட்டம் படையினர் மீதும் கற்கள், தடிகளால் தாக்கியதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இதனால் பல படையினர் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது. (சி-மா)

### படை நடவடிக்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்கள் தெரிவித்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முக்கிய தளபதிகளை இழந்துள்ளதால் சிப்பாய்கள் மத்தியில் இவ்வாறானதொரு உறுதிமொழியை பெறவேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலை எழுந்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (சி)

### தமிழக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழக கரையோரப் பகுதியை பாதுகாக்க குறைந்தது 25 கோடி ரூபாவை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் தமிழ் நாடு எல்லையோர மாநிலமாக அங்கிகரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (க)

### யுத்தமுனைகளுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நம்பிக்கை தோன்றுவதை தடுக்கவும், அவர்களுக்கு உற்சாக மூட்டுவதற்காகவுமே பாதுகாப்பு அமைச்சின் அவசர பணிப்பில் படைத்தளபதிகள் இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை யுத்தமுனைகளில் படையினரை சந்திக்கும் தளபதிகள் தொடர்ந்தும் புலிகளுக்கு எதிராக போரை நடத்துவதற்கு அவர்களின ஒத்துழைப்பு உறுதி மொழியையும் பெற்றுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

## குளங்கள் புனரமைப்பு

(உடுப்பிட்டி)

போருட் நிறுவனம் வடமராட்சியில் பத்துக் குளங்களை புனரமைப்பு செய்து வருகிறது. அரச அதிபரின் சிபார்சையடுத்து தெரிவு செய்யப்பட்ட குளங்களில் எட்டுகுளங்கள் திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளன.

இக்குள திருத்த வேலைகளில் ஈடுபட்ட ஏழைக்குடும்பங்களுக்கு ஒரு நாள் வேலைக்கு 2 கிலோ அரிசி, ஒரு கிலோ மா, அரைக் கிலோ சீனி, அரைக் கிலோ பருப்பு ஆகிய உலர் உணவுகளை போருட் வழங்கி வருகிறது. (150-அ]

## மக்கள் இடம் பெயர்வு

(கொக்குவில்)

அராலிப் பகுதி மக்கள் தங்கள் உடமைகள் கால்நடைகள் சகிதம் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தாலும் என்ற அச்சம் காரணமாக கொக்குவில். தாவடி, சங்கானை, சித்தன்கேணி பகுதிகளில் தங்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். [135]

### நியத்தலாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் அந்த முகாமிலிருந்து தப்பியோடினார்களாம்.

உடனடியாக அங்கிருந்த காவல்படையினர் ஜீப் வண்டிகளில் துரத்திச்சென்று தேடுதல் நடத்தியதாகவும் பின்னர், பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை பகுதிகளில் வைத்து பலர் பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக படையினர் பலர் கடமையைவிட்டு தப்பியோடுவது தெரிந்ததே. (சி)

### பத்மநாபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுக்குழுவினர் திருமதி சுப்புலக்ஷ்மியின் கணவர் ஜெகதீசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் ஆகியோரீ குற்றவாளிகளுக்குப் புகலிடம் அளித்ததாகக் கூறியுள்ளனர்.

ராஜீவ் கொலைக்குக் காரணமாக இருந்த ஒற்றைக்கண் சிவராசனே இக்கொலையில் ஈடுபட்டதாகவும், இவருடன் 6 உறுப்பினரும் இக்கொலையில் ஈடுபட்டதாகவும் மேற்படி குழு தெரிவித்துள்ளது. (க)

### மலையகத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முயற்சித்துவருகிறார்கள் என ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஓசி அபயகுணசேகர தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இந்த ஹோட்டல் விவகாரம் குறித்து தொண்டமானுக்கு எதிராக இனவாத பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (தே-சி

### தளபதிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கும்பல் அலைந்து திரிந்ததாகவும் அமைச்சர்கள், அதிகாரிகள், படையினர் மீது தாக்குதலை பல முனைகளிலுமிருந்தும் நடத்தியதாகவும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வன்முறைகளில் ஈடுபட வேண்டாமென பொலிஸார் பல தடவைகள் எச்சரித்துதும் மக்கள் கட்டுப்படாததால், 'கலக' எதிர்ப்பு பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தையும், வானை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தையும் செய்தனர்,

இதனால் ஆவேசமடைந்த மக்கள் தொடர்ந்தும் பரவலாக வன்முறைகளில் ஈடுபட்டதால் பெரும் கலவரம் ஏற்பட்டதாகவும், பெருமளவு மக்கள் அங்கிருந்து நாலா பக்கமும் சிதறி ஓடியதாகவும் கூறப்படுகிறது. (சி-மா-க)

### அமைச்சர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடந்தது

இப்பகுதியை உடனடியாகச் சூழ்ந்துகொண்ட விசேட அதிரடிப் படையினர் அமைச்சர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கி, அவர்களை உயிராபத்தின்றிக் காப்பாற்றினார்களாம். [சி-மா-க]

### பல வாகனங்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ங்களில் பெருமளவு பொலிஸாரின் ஜீப் வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களுமாகும்.

அரச அதிகாரிகளின் கார்களுக்கும் தீயிடப்பட்டது. எங்கும் ஒரே புகைமண்டலமாக காட்சியளித்ததாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

ஆத்திரமுற்ற படையினர் மேற்கொண்ட பலத்த குண்டாந்தடியடிப் பிரயோகத்தினால் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்ததையும் செய்தியாளர்கள் பலர் நேரில் கண்டுள்ளனர். (க-மா-சி)

## பகிஷ்கரிக்க முடிவு

(ஸ்ரீநகர்)

இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ம் திகதியை காஷ்மீர் தீவிரவாதிகள் எதிர்ப்பதற்கும் புறக்கணிப்பதற்கும் தீர்மானித்துள்ளார்கள்.

இதனிடையில் பாகிஸ்தான் சுதந்திரதினமான ஆகஸ்ட் 14ம் திகதி வெற்றித்திருநாளாக கொண்டாடுவதோடு ஸ்ரீநகரில் பாகிஸ்தான் தேசியக்கொடியைப் பறக்கவிட்டு அணிவகுப்புகள் நடத்தப்படுமென்றசுவரொட்டிகளை காஷ்மீர் தீவிரவாதிகள் ஒட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 65இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8